தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 16, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 29, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்".

ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிப் பல துன்பங்கள் வந்தபோதிலும், அவற்றைக் கண்டு மனங்கலங்காதவரை, அடைந்த துன்பம், தானே துன்பப்பட்டு மறைந்தொழியும்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. நா. பெருமாள் அவர்கள் 25–3–2005 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. நா. பெருமாள் அவர்கள் பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 முதல் 1980 வரை மற்றும் 1980 முதல் 1984 வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 221, திரு. ப. இளவழகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

221—

தடுப்பணை

***946—திரு. ப. இளவழகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள மருதை ஆற்றின் குறுக்கே வாரணவாசி — புதுப்பாளையம் அருகே தடுப்பணை கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருதை ஆறு, உப்பிலியாபுரம் தொகுதி பச்சைமலையில் தோன்றி, கொள்ளிடம் ஆற்றில் சென்று இணையக்கூடிய ஆறு ஆகும். ஒரு நாள் பெருமழை பெய்தாலே, பல நாள் வெள்ளப் பெருக்கெடுத்து இந்த ஆற்றின் மூலமாக நீர் ஓடி, கொள்ளிடம் ஆற்றில் வீணாகக் கலக்கின்றது. இந்த ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, அந்த நீரைச் சுக்கிரன் ஏரி என்கின்ற, சுமார் 525 ஏக்கர் பரப்பளவுள்ள அந்த ஏரிக்கு, அந்த நீரைத்